## கல்வித்தொலைக்காட்சி பணித்தாள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுக்க:

1)ஒரு தொடர்மொழியில் இரு சொற்களின் இடையில் வேறுசொல் வந்து பொருள் உணர்த்துவது----

அ)இடைச்சொல் ஆ)தொகைநிலைத்தொடர் இ)தொகாநிலைத்தொடர்

2)தொகாநிலைத்தொடர்---------வகைப்படும்.

அ)6 ஆ)9 இ)8 ஈ)10

3)வினைப்பயனிலை தொடர்ந்து வந்த எழுவாய்த் தொடரைக் கண்டுபிடி

அ)எழிலன் ஓவியன் ஆ)நெல் விளைந்தது இ)மழை பெய்யுமா? ஈ)அவன் மனிதன்

4)வினைமுற்றுடன் பெயர் தொடர்வது---------

அ)பெயரெச்சம் ஆ)வினையெச்சம் இ)வினைமுற்றுத்தொடர் ஈ)முற்றெச்சத்தொடர்

5)முற்றுப்பெறாத வினை,பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிவது-----------

அ)வினைமுற்றுத்தொடர் ஆ)வினையெச்சத்தொடர் இ)முற்றெச்சம் ஈ)பெயரெச்சத்தொடர்

6)*உண்டவர் உண்ண,உண்கின்ற* அனைவரும் மெய்ம்மறந்து போயினர்

அடிக்கோடிட்ட சொற்கள் முறையே

அ)வினையாலணையும் பெயர்,வினையெச்சம்,பெயரெச்சம்

ஆ)தொழிற்பெயர்,வினையெச்சம்,பெயரெச்சம்

இ)வினையெச்சம்,பெயரெச்சம்,வினையாலணையும் பெயர்

ஈ)பெயரெச்சம்,வினையெச்சம்,வினைத்தொகை

7)வேற்றுமைத் தொகாநிலைத் தொடரைத் தேர்வு செய்க.

அ)அன்பே வா ஆ)காவிரி பாய்ந்தது இ)பள்ளிக்குச் சென்றாள் ஈ)கேட்ட வினா

8)மற்றொருவர் என்பது ---------------- தொடர்.

அ)எண்ணுப்பெயர் ஆ)இடைச்சொற்றொடர் இ)வினையாலணையும் பெயர்

9)பெயரெச்சங்களை----------- என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சத்துடன் சேர்ப்பதால்---------உருவாகின்றன.

அ)செய்ய,வினையெச்சம் ஆ)செய்யும்,பெயரெச்சம் ஈ)செய, கூட்டுநிலைப்பெயரெச்சங்கள்.

10)அடுக்குத்தொடரைக் கண்டறிக.

அ)பலபல ஆ)பற்பல இ)பளபள ஈ)சல சல



LIVEWORKSHEETS